<u>மன்றப்பொருள்</u>

2020 ம் ஆண்டு ஜீன் 30–06–2020 ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற **சாதாரணக்கூட்டம்** பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு.எஸ். பிரபாகரன்**
**தனி அலுவலர்.**

1. பண்ணுருட்டி நகராட்சி வார்டு எண். 03, விழமங்கலம் வ.உ.சி. நகரில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் தயார் செய்யப்பட்டு நகரமன்ற தீர்மான எண். 300 நாள். 31.01.2019–ல் அனுமதி பெறப்பட்டு 14.02.2019–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.SR Construction & Contractor , கடலூர் என்ற நிறுவனத்தாருக்கு 15.02.2019ல் பணியானை வழங்கப்பட்டு, மேற்கண்ட வார்டு 03 விழமங்கலம் வ.உ.சி. நகரில் இரண்டு இடங்களில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கும்போது, ஒடவா போர் (Mud Loss) ஆகி இரண்டு இடங்களிலும் ஆழ்துளை கிணறுகள் வீணாகிவிட்டது.

   இந்நிலையில் மேலும் ஏற்கனவே அப்பகுதியில் 60,000–ம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு அமைக்கப்பட்டிருந்த ஆழ்துளை கிணறும் கோடைகாலம் என்பதால் பயன்பாட்டிற்கு லாயக்கற்ற நிலையில் உள்ளது. அங்கு எந்த இடத்திலும் ஆழ்துளை கிணறு அமைக்க வாய்ப்பு இல்லை. ஆகையால் தற்போது பொதுமக்கள் குடிநீருக்கு மிகவும் சிரமப்படுகின்றனர். பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி மேற்கண்ட வார்டு எண்.03 விழமங்கலம் வ.உ.சி. நகரில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்ட பணியை அவ்விடத்தில் கைவிட்டு, அதற்குபதிலாக அதே பகுதிக்கு வார்டு 02, விழமங்கலம் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் புதியதாக போர்வெல் அமைத்து குடிநீர் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

   அலுவலக குறிப்பு : 1.மன்றம் அனுமதிக்கலாம்.
   2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

   **கோ.எண். 451/இ2/2018**

2. நகராட்சி பொது சுகாதாரம் வார்டு எண். 26ல் மணி நகரில் அமைந்துள்ள நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தினை பாதுகாக்கும் பொருட்டு மூன்று காவலர்களை மாவட்டாட்சியர் அவர்களின் தர ஊதியம் வழிகாட்டுதலின்படி தினக்கூலி நபர் ஒருவருக்கு ரூ. 280/– வீதம் பாரதியார் ஆண்கள் சுய உதவிக்குழு மூலம் பணி அமர்த்தப்பட்டு தற்சமயம் பணி மேற்கொண்டு வரும் நிலையில் அவர்களின் அனுமதி 31.03.2020 தேதியுடன் முடிவடைவதாலும், உரமாக்கும் மையம் தனித்து இருப்பதினாலும், இயந்திரங்கள் விலையுயர்ந்த பொருட்கள் உள்ளதாலும் 24 மணி நேரமும் பாதுகாவலர்கள் இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதினால், தொடர்ந்து 01.04.2020 முதல் 31.03.2021 முடிய 12 மாதங்களுக்கு பணி மேற்கொண்டு வரும் பாரதியார் ஆண்கள் சுய உதவிக்குழு மூலம் மூன்று காவலர்களை (எட்டு மணி நேரத்திற்கு ஒருவர் வீதம்) பணியமர்த்திடவும், அவர்களுக்கு மாவட்டாட்சியர் அவர்களின் தர ஊதியம் வழிகாட்டுதலின்படி தினக்கூலி நபர் ஒருவருக்கு ரூ.280/– வீதம் வழங்கிடுவதற்கு செலவாகும் உத்தேச செலவினம் ரூ. 3.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

   அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
   2.இச்செலவினத்தினை தூய்மை இந்தியா திட்ட நிதியிலிருந்து செலவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

   கோ.எண்.

3. ஆணையர் (கூ.பொ) அவர்களின் ஜீன் 2020ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

இடம் – பண்ணுருட்டி நகராட்சி
நாள்– 30–06–2020

ஆணையாளர் (ம) தனி அலுவலர்
பண்ணுருட்டி நகராட்சி.